**<u>IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR</u>**

**DEPOSITION OF WITNESS**

**R.W.3**

**MCOP No. 127/2020**

| | | |
|---|---|---|
| **Name** | : | மயில்சாமி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 13.11.2025.**

**எ.ம.சா.3 முதல் விசாரணை:-**

நான் தற்போது ஏத்தாப்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் வந்த அழைப்பாணை அடிப்படையில் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். ஏத்தாப்பூர் காவல் குற்ற எண்.420/2020 297,337 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கையானது ராஜா த.பெ.ராமையா, ஆதிதிராவிடர் தெரு, கீழுர் ஒட்டப்பட்டி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை படி நெல் அறுவடை இயந்திரம் எண். TN 14 A 0807 நெல் அறுவடை இயந்திரம் என்று பதிவாகி உள்ளது. ஆனால் எங்களிடம் ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி பதிவு எண் TN 16 A 0807 நெல் அறுவடை இயந்திரம் என்று மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையில் வாகனத்தின் எண் மாற்றமானது தட்டச்சு தவறாகும். மேற்படி இரண்டு எண்களும் ஒரே வாகனத்தை தான் குறிக்கின்றன. நான் விபத்திற்கு மறுநாள் 06.05.2020ல் சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது

சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை எ.ம.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தாக்கல் செய்துள்ள சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையின்படி விபத்தினால் காயமான கனகராஜ் என்பவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் TN 52 S 3524 என்ற வாகனத்தில் வாழப்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எடுத்து செல்லும்போது மேற்படி ஆம்புலன்ஸ் வாகனம் TN 77 E 2035 என்ற வண்டியில் மோதி TN 52 W 7141 என்ற லாரியில் மோதி விபத்து ஏற்பட்டதாக விசாரணையில் சொல்லப்பட்டுள்ளது. சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை விசாரணை செய்து தாக்கல் செய்யும்போது மேற்படி கனகராஜை சிகிச்சைக்காக எடுத்து செல்லும்போது தான் விபத்து ஏற்பட்டதாக விசாரணையில் தெரிய வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி எனது விசாரணையில் இரண்டாவதாக நடந்த விபத்தில் தான் இறந்தார் என்றால் சரிதான். முதல் ஆம்புலன்சில் எடுத்து செல்லும் போது உயிருடன் தான் இருந்துள்ளார். தனியார் ஆம்புலன்ஸ் வாகனத்தின் விவரங்கள் TN 52 S 3524 பற்றிய விவரங்கள் எங்கள் நிலைய கோப்பில் இல்லை. ஏனெனில் அந்த விபத்து ஏற்பட்டது வாழப்பாடி காவல் நிலைய எல்லை.

**குறுக்கு விசாரணை**

மனுதாரர் கொடுத்த புகாரை யார் எழுதினார்கள் என்ற விவரம் அதில் இல்லை என்றால் சரியல்ல. அவரே எழுதி கொடுத்தது போலதான் உள்ளது. மேற்படி புகாரில் ராஜா எழுத்து மூலமாக தான் எழுதியதாக தான் உள்ளது மனுதாரர் எழுதிய புகாராக இல்லை. நான் தாக்கல் செய்த சட்ட மாறுதல் அறிக்கையில் எ.ம.சா.ஆ.3 ல் TN 14 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் கொடுத்த சட்ட மாறுதல் அறிக்கையில் ம.சா.ஆ.2 ல் TN 16 என்று திருத்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது சுழித்து கையொப்பம் இடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.6 ல் TN 16 A 0807 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சார்ஜ் சீட் தாக்கல் செய்யும்போது முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள வாகன எண் தட்டச்சு தவறுதலாக TN 14 A 0807 என்று போடப்பட்டுள்ளது என்ற

விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு காவல் துறை சார்பாக தவறுதலாக வண்டி எண் குறிப்பிட்டு குற்ற அறிக்கை தாக்கல் செய்ததற்கு மனுதாரர் எவ்விதத்திலும் பொறுப்பல்ல என்றால் சரியல்ல. மேற்படி குற்ற வழக்கில் விசாரணை அதிகாரியோ குற்ற வழக்கை தாக்கல் செய்த அதிகாரியோ அல்ல என்றால் சரிதான். இரண்டாவதாக நடந்த விபத்தில் தான் இறந்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. இந்த குற்ற அறிக்கையை பொறுத்து நெல் அறுவடை இயந்திரத்தின் அதிவேகமும் அஜாக்கிரதையும் தான் காரணம் என்று குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.13 17:40:38 +0530

**Accidents Claim Tribunal, Attur.**